கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 22.02.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஆஸ்துமா நோய் கண்டறிதல் – சிறப்பு முகாம்

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாய் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் மாவட்ட காசநோய் ஒழிப்பு மையம், பண்ணைத் தொழிலாளர்களுக்கான காசநோய் பரிசோதனை முகாம் 21.02.2025 மத்திய பண்ணை–யில் நடைபெற்றது,

இந்த முகாமை முனைவர். டி. சுரேஷ்குமார், முதன்மையர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் மற்றும் முனைவர். எம்.கே. கலாராணி, இயக்குநர், பயிர் மேலாண்மை இயக்ககம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பண்ணை தொழிலாளர்களுக்கு இரத்த கொதிப்பு, சர்க்கரை அளவு மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் நிலை சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு பி.என்.புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் அடுத்த கட்ட சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வின் மற்றொரு பகுதியாக பண்ணை மகளிருக்காக இலவச மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் கண்டறியும் முகாம் ஸ்ரீ இராம கிருஷ்ணா மருத்துவமனை மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர் நல மைய பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களால் நடத்தப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**